# அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை
# *Ang Mo Kio Tamil Methodist Church*

## *9th பிப்ரவரி / February 2025 ஞா யிறு ஆராதனை*
## *Discipleship & Nurture Sunday*

| | |
|---|---|
| ✝ **ஆராதனைக்கு அழைப்பு**<br>Call to Worship | **திருமதி. கோஹிலா**<br>Mrs. Kohila |
| **இறைவணக்கப்பாடல்**<br>Introit | **பாடகர் குழு**<br>Choir |
| **ஜெபம்**<br>Prayer | **திருமதி. கோஹிலா**<br>Mrs. Kohila |
| ✝ **தொடக்க பாடல்**<br>Opening Song | ***சபையார் இணைந்து***<br>Congregation |

### என் பாவம் தீர்ந்த நாளையே

*1. என் பாவம் தீர்ந்த நாளையே*
*அன்போடு எண்ணி ஜீவிப்பேன்*
*அந்நாளில் பெற்ற ஈவையே*
*சந்தோஷமாய்க் கொண்டாடுவேன்.*

**இன்ப நாள் இன்ப நாள்**
**என் பாவம் தீர்ந்துபோன நாள்**
**பேரன்பர் என்னை ரட்சித்தார்**
**சீராக்கி இன்பம் நல்கினார்**
**இன்ப நாள் இன்ப நாள்**
**என் பாவம் தீர்ந்துபோன நாள்**

*2. இம்மானுவேல் இப்பாவியைத்*
*தம் சொந்தமாக்கிக் கொண்டனர்.*
*சந்தேகம் நீக்கி மன்னிப்பைத்*
*தந்தென்னை அன்பாய்ச் சேர்த்தனர்.*

*3. என் உள்ளமே, உன் மீட்பரை*
*என்றைக்கும் சார்ந்து வாழுவாய்*
*ஆருயிர் தந்த நாதரை*
*ஓர்க்காலும் விட்டு நீங்கிடாய்*

*4. ஆட்கொண்ட நாதா, என்தனை*
*நாடோறும் தத்தஞ் செய்குவேன்*
*பின் மோட்ச வீட்டில் பேரன்பை*
*இன்னோசையாலே பாடுவேன்.*

| | |
|---|---|
| ✝ ***மாறி வாசித்தல் 6ம் ஞாயிறு***<br>*“சங்கீதம் 22”* | ***சபையார் இணைந்து***<br>Congregation |

“என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?”
Psalter Reading “Psalm 22”

| | |
|---|---|
| ✝ **தந்தை போற்றி**<br>Gloria Patri | ***சபையார் இணைந்து***<br>Congregation |
| **துதி ஆராதனை**<br>Singspiration | |
| **ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்**<br>Thanksgiving & Pastoral Prayer | **மறைதிரு. சரவண குமார்**<br>Rev. Saravana Kumar |
| **பரமண்டல ஜெபம்**<br>Lord’s Prayer | ***சபையார் இணைந்து***<br>Congregation |
| ✝ **காணிக்கை பாடல்**<br>Offertory Song | ***சபையார் இணைந்து***<br>Congregation |

### என்ன என் ஆனந்தம்! என்ன என் ஆனந்தம்!

**என்ன என் ஆனந்தம்! என்ன என் ஆனந்தம்!**
**சொல்லலாகுமோ**
**மன்னன் கிறிஸ்து என் பாவத்தை எல்லாம்**
**மன்னித்து விட்டாரே.**

*1. கூடுவோம், ஆடுவோம், பாடுவோம், நன்றாய்*
*மகிழ் கொண்டாடுவோம்*
*நாடியே நம்மைத் தேடியே வந்த*
*நாதனைப் போற்றிடுவோம்.*

*2. பாவங்கள், சாபங்கள், கோபங்கள் எல்லாம்*
*பரிகரித்தாரே;*
*தேவாதி தேவன் என் உள்ளத்தில் வந்து*
*தேற்றியே விட்டாரே.*

*3. அட்சயன் பட்சமாய் இரட்சிப்பை எங்களுக்*
*அருளினதாலே,*
*நிச்சயம் சுவாமியைப் பற்றியே சாட்சி*
*பகர வேண்டியதே.*

*4. வெண்ணங்கி பொன்முடி வாத்தியம் மேல்வீட்டில்*
*ஜெயக் கொடியுடனே,*
*மண்ணுலகில் வந்து விண்ணுலகில் சென்ற*
*மன்னனைத் தோத்தரிப்போம்.*

✝ **பூலோகத்தாரே யாவரும்** — **சபையார் இணைந்து**
Doxology — Congregation

✝ **திருமறைப் பாடம்** — **திரு. ஜேம்ஸ்**
***ரோமர் 8 : 1 - 4*** — Mr. James

Scripture Reading
Romans 8 : 1 – 4

**அருளுரை** — **மறைதிரு. சரவண குமார்**
Sermon — Rev. Saravana Kumar

✝ **அர்ப்பணகீதம்** — **சபையார் இணைந்து**
Offertory & Closing Song — Congregation

**ஓ இயேசு உமதன்பு**

**ஓ இயேசு உமதன்பு எத்தனை பெரியது**
**ஆகாயம் பூமி மலை ஆழிகளுக்கெல்லாம் பெரியது**

*1. அளவில்லா ஆனந்தத்தால் அகம், நிறைந்தது*
*ஆண்டவர் காரியங்கள் அதிகம் சிறந்தது*
*அன்றாடம் காலை மாலைகளிலும் துதிக்க உயர்ந்தது*

*2. சங்கட சமயங்களில் மங்கியே வாடுகிறேன்*
*துங்கனே இரங்குமென ஏங்கியே நாடுகிறேன்*
*பங்கமில்லாமல் பதிலளிப்பேன் என்றதால் பாடுகிறேன்.*

*3. இருளாம் பள்ளத்தாக்கில் மருகியே நடந்தாலும்*
*அருமெந்தன் மேய்ப்பராய் அருகிலிருப்பதாலும்*
*கருணையாயென்னைக் கரம் பிடித்தே*
*கர்த்தரே காப்பதாலும், கர்த்தரே காப்பதாலும்*

*4. குறைவுள்ளவனானாலும் கூடவே இருக்கிறீர்*
*நிறைவாம் புல் தரைகளில் மெதுவாய் நடத்துகிறீர்*
*இறைவனாம் இயேசு எல்லாவற்றிலும்*
*திருப்தியாக்குறீர், திருப்தியாக்குறீர்*

*5. தேவனுடைய வீட்டில் சித்தப்படி துதிப்பேன்*
*ஏக இதயத்துடனே என்றுமதை மதிப்பேன்*
*ஆராதிக்க அருகராம் இயேசு அல்லேலூயா ஆமென்*
*அல்லேலூயா ஆமென்*

**அறிவிப்புகள்**
Announcements

✝ ***மனப்பாட வசனங்கள்*** — **சபையார் இணைந்து**
***Memory Verses*** — Congregation

***II கொரிந்தியர் 12 : 9***
***2 Corinthians 12 : 9***

***9. அதற்கு அவர்: என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்.***

✝ **முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்** — **மறைதிரு. சரவண குமார்**
Closing Prayer & Benediction — Rev. Saravana Kumar

✝ **ஆசீர்வாதப் பாடல்**
Benediction Song

✝ ***சபையார் நிற்கவும்*** ⁄ **Indicates Congregation standing**